தமிழ்ச்சிட்டு



குரல்: 1. இசை: 4.

கரு 15 காசு

த[illegible]த்தமிழ்
சி[illegible]வர் கலை இதழ்

உங்கள் மடல்கள்

O எங்கள் இளந்தமிழ்ப் பிஞ்சு நெஞ்சங்களைத் தட்டி எழுப்பித் தமிழ்த்தேனை ஊட்டவல்லது 'தமிழ்ச்சிட்டே'!

எம். ஆர். ஜெகதீசன் முஞ்சூர்பட்டு. வேலூர் வட்டம்.

O மாணவர் அனைவர் உள்ளங்களிலும் உள்ள அறியாமை இருளைப் போக்கித் தேனினும் இனிய பாக்களாலும் கட்டுரைகளாலும் எங்களுக்குத் தமிழுணவூட்டித் தொண்டுசெய்யத் தூண்டுகின்றது.

எழிலரசன், பத்தாம்நிலை, சங்கராபுரம். தெ. ஆ.

O தமிழுக்கும், தமிழினத்திற்கும் உண்மைத் தொண்டாற்றிவரும் 'தமிழ்ச்சிட்டு' தமிழகத்திலேயே நிகரற்ற சிறுவர் கலை இதழ். தமிழ்மாணவர் ஒவ்வொருவரின் கையிலும் உள்ளத்திலும் ஒளிர வேண்டியதொன்று. வாய்க்கும் பொழுதெல்லாம் எம் மாணவர்க்குச் சிட்டு தரும் கருவூலங்களை வாரி வழங்குவதில் மட்டிலா மகிழ்வுகொள்வேன். தங்கள் நல்லெண்ணம் வளர்வதன்மூலம் 'சின்னஞ்சிறு உலகம் சீர்பெற இறைவனை இறைஞ்சுகின்றேன்.

புலவர் த. மாணிக்கம் தமிழாசிரியர், பொறையாறு.

O தங்களின் 'தமிழ்ச்சிட்டு' 'தென்மொழி' ஆகிய இரண்டையும் மாதந்தோறும் தவறாது வாங்கிப் படித்துவரும் ஓர் எளிய உழைப்பாளி நான். தாய்மொழிக்காகவும் தாய்நாட்டிற்காகவும் தாங்கள் மேற்கொண்டுள்ள பணியைப் பாராட்டுகின்றேன். தங்களின் தமிழ்த்தொண்டில் நானும் பங்குகொண்டு பணியாற்ற மிகுந்த ஆவலுள்ளவனாக இருக்கின்றேன்.

வே. நா. தாசன் சிதம்பரம். தெ. ஆ.

O 'இளைதாக முள்மரங்கொல்க; களையுநர் கைகொல்லுங் காழ்த்த விடத்து' — என்ற ஞாலமன்றுக்கொப்ப, 'தென்மொழி' அன்றித் தமிழ்ச்சிட்டு வாயிலாகவும் நீங்கள் கொண்டுள்ள தமிழ்ப்பணிக்குப் போதிய மனத்திட்பம் நல்குமாறு 'வேண்டுதல் வேண்டாமை இலான்' அடியைத் தொழுகின்றேன்.

சி. கோ. பசுமலையரசன். சீராமபுரம், பெங்களூர் - 21.

O தூய்தமிழ்ச் சொல்லால் உள்ளம் துள்ளிடக் களிப்பு மல்க
ஆய்தமிழ் அன்னைக் கிட்ட அணிமலர் மாலை யாகப்
பாய்தமிழ்க் கருத்தைத் தாங்கும் பைந்தமிழ்ச் சிட்டு நாட்டின்
தூய்தமிழ்ச் சிறார்கள் உள்ளம் துள்ளலால் உயரும் வாழி!

கருவூர் பாரி. கரூர். திருச்சி மா.

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ் சிறுவர் கலையிதழ்

இன்றைய பயிரே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்-1 | தி. பி. [illegible] கார்த்திகை (நவம்பர்) | இசை-4

வீண் புகழ்ச்சி வேண்டா!

சிறுவர்களாகிய நீங்கள் சில அருவருப்பான நடைமுறைகளை இளமையிலிருந்தே அகற்றுதல்வேண்டும். ஆரவாரமான சொற்களும் செயல்களும் அறிவற்றவர்களிடமே மிகுதியாகக் காணப்படுவன வாகும். அறிவுள்ளவர்கள் மிகவும் அடக்கமாகவும், அமைதியாகவுமே நடந்துகொள்ளுவார்கள்.

" வற்றிய ஓலை கலகலக்கும்; எஞ்ஞான்றும்
பச்சோலைக்கு இல்லை ஒலி "

என்ற பாடலைப் படித்திலையா? அதனால் எப்பொழுதும் அடக்கமாக இருப்பவர்களைப் பார்த்து, அவர்கள் அறிவில்லாதவர்கள் என்று எண்ணிக்கொள்ளுதலும் கூடாது.

பொறுப்பாசிரியர்:- பெருஞ்சித்திரன்.
உறுப்பாசிரியர்:- இறைக்குருவன்.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

அடக்கம் உடையார் அறிவிலர் என்று எண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா – மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு.

–என்ற நல்வழிச் செய்யுளைப் படித்திருப்பீர்களே!

பொதுவாக இக்காலத்து மாணவர்களில் பெரும்பாலார் திரைப் படங்களில் வருகின்ற நடிகர்களைப்போல் தாமும் தலைமுடியை வாரி விட்டுக்கொள்வதும், சட்டையின் கழுத்துப்பட்டியைத் தூக்கிவிட்டுக் கொண்டு வான்கோழியைப்போல் சிலிர்த்து நடைபோடுவதும், தெருவில் வருவோரையும் போவோரையும் பார்த்துச் சீழ்க்கையடிப்பதும், கெக்கலி கொட்டிச் சிரித்தவாறு ஒருவர் கையை ஒருவர் பிடித்துக் கொண்டு தள்ளாடித் தள்ளாடிப் போக்கு வரத்துக்கு இடையூறு தரும்படி நடப்பதும் மிகவும் அருவருக்கத்தக்க செயல்களாகும். மாணவர்களைப்போலவே மாணவிகளும் போட்டி போட்டுக்கொண்டு, திரைப் படங்களில் வரும் நடிகையரைப்போலவே அரைப்பின்னலும், தூக்குக் கொண்டையுமாக, மெல்லிய மேலாடைகளை அணிந்துகொண்டு ஆரவாரமாகத் தோற்றமளிப்பதும், தம் உயரிய பண்புகளுக்கு இழுக்கு வரும்படி நடந்துகொள்வதும் தமிழ்நாட்டுக்கே கீழ்மை சேர்ப்பவாகும்.

இனி, இத்தகைய போலி நடவடிக்கைகள் கொண்ட புல்லிய அறிவுடன் நீங்கள் புரிந்துகொண்ட கட்சித் தலைவர்களையும், திரைப் படத் தலைவர்களையும் பலபடப் பாராட்டி, அவர்களின் விருப்பு வெறுப்புக்களையே உங்களுடைய விருப்பு வெறுப்புகளாகக் கொள்வதும், அவர்களின் தன்மைகளையே உயர்ந்த தன்மைகளாகக் கருதிப் பின் பற்றுவதும் உங்களின் நடைமுறைக்குக் கறை சேர்ப்பனவாகும்.

மாணவர்கள் தலைவர்களைப் பாராட்டுதல் தவறு என்ற கருத்தில் இதைச் சொல்லவில்லை. அவர்களின் பாராட்டுதல் அவர்கள் உள்ளத்தில் உள்ள தன்னம்பிக்கையைக் குறைத்துவிடக் கூடாது; தன்னறிவைச் சிதைத்துவிடக் கூடாது.

நம் அறிவு வளரவேண்டிய அறிவு. இன்னும் இவ்வுலகத்தில் நாம் தெரிந்துகொள்ளவேண்டியவை பலப்பல. அவற்றைத் தெரிந்து, இவ்வுலக நடவடிக்கைகளைப் புரிந்துகொள்ளும் முன்பே நாம் அவற்றில் ஈடுபட்டு விட்டோமானல் நம் அறிவு நிலைகுத்திப் போகும்; அவ்விடங்களிலேயே நின்றுகொள்ளும்! அப்படி நின்றுகொண்ட பின் அறிவுக்கு வளர்ச்சியுமில்லை. உள்ளத்திற்கு மலர்ச்சியுமில்லை.

எனவே நீங்கள் உங்கள் அறிவைத் தெளிவாக வளர்த்துக் கொள்ளுவதற்கு முன், வாயைப் பிளந்துகொண்டு எங்கும் நின்றுவிடாதீர்கள்; அறிவை மழுக்கிக்கொண்டு யாரையும் வானளாவப் புகழாதீர்கள்! வாழ்க்கையைக் குருடாக்கிக்கொண்டு யாரையும் பின்பற்றிப் போகாதீர்கள்.

கற்றுக்கொள்ளுங்கள்; கற்கவேண்டியவற்றைக் கற்றுக் கொள்ளுங்கள்; அதன்பின் சரியானவற்றைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு அவற்றின்படி நிற்கப்பழகலாம். அறுவடை நேரத்தில் வேடிக்கையும் வேண்டா; வீண் பேச்சுக்களும் வேண்டா; 'வாழ்க' 'ஒழிக' கூச்சல்களைக் குப்பைக்கூடையில் போட்டுவிட்டுப் படிப்பதில் அறிவை ஈடுபடுத்துங்கள். இல்லையேல் இவ்வுலகில் வழிதப்பி இடர்ப்படுவீர்கள். எச்சரிக்கையாக இருங்கள்!

- உலகின் கடல்நீர் அனைத்திலும் கலந்துள்ள பொன்னை எடுத்தால், உலகில் உள்ள ஒவ்வொருவர்க்கும் கோடி உருபா மதிப்புள்ள பொன் கிடைக்கும்.
- திருக்குறளில் 12,000 தமிழ்ச்சொற்கள் பயிலப்பெற்றிருக்கின்றன. அவற்றில் ஏறத்தாழ 50 சொற்களே வடசொற்கள்.
- கதிரவனிடமிருந்து நமக்கு ஒளிவந்துசேர 8 நிமையம் 38 நொடி ஆகிறது.

உலகம் சுற்றுவோம்

ஒரு மாநிலம் கூடிற்று.

இதுவரை ஒரே பஞ்சாப் மாநிலமாக இருந்ததை, புது பஞ்சாப், ஆரியானா என இரு மாநிலங்களாகப் பிரித்துள்ளனர். மொழியை அடிப்படையாக வைத்தே இப்பிரிவுகள் ஏற்பட்டுள்ளன. இப்பொழுது இந்தியாவில் 17 மாநிலங்கள் உள்ளன.

உயிர் மொழிகள்

உலகில் இதுவரை 6000 மொழிகள் தோன்றியுள்ளன. எனினும் அவற்றில் இன்று உயிருடன் உள்ள மொழிகள் 2700 என்று அண்மையில் மாசுகோவில் நடந்த ஆராய்ச்சி முடிவில் அறிவிக்கப்பட்டது,

கென்னடியைக் கொன்றவர் . . . ?

இதுவரை அமெரிக்காவின் மக்கள்தலைவர் கென்னடியைக் கொன்றவர் ஆசுவால்ட் என்பவரே என்று கருதப்பட்டு வருகின்றது. ஆனால் கென்னடி சுடப்பட்ட நேரத்தில் செய்தியாளர் ஒருவர் எடுத்த புகைப் படத்தில், யாரோ ஒருவர் கென்னடியைநோக்கித் தம் வேட்டெஃகத்தை (துப்பாக்கியை)க் குறிவைத்துக் கொண்டிருப்பதுபோல இருக்கின்றதாம். இவர் ஆசுவால்டு இல்லையாம். இதுபற்றி அமெரிக்கத் துப்பறியும் துறை ஆய்ந்து வருகின்றதாம்.

மருத்துவ மனைகளில் தமிழ் !

வரும் திசம்பர் முதல்நாளிலிருந்து சென்னை மாநிலத்தில் உள்ள மருத்துவ மனைகளிலும், அரசினர் உயிர்முறிக் குழும்பு (Life Insurance Co) களிலும் தமிழ் ஆட்சி மொழியாக்கப்படும் என்று அரசினர் குறிப்பு ஒன்று கூறுகின்றது.

உலகப் புயல் மாதம் !

இந்த நவம்பர் மாதத்தை ‘உலகப் புயல் மாதம்’ என்று சொல்லலாம். இந்தியாவின் தெற்குப் பகுதிகளில் கிழக்கிலும் மேற்கிலும் புயல் விளைவித்த சேதங்கள் கணக்கிலடங்கா. கொல்லப்பட்ட உயிர்கள் ஏராளம்! இதுவன்றி இத்தாலி, சுவிட்சர்லாந்து, கனடா, அமெரிக்கா முதலிய நாடுகளிலும் இம்மாதம் பனிப்புயல் பெருத்த சேதங்களை விளைவித்துள்ளது. சிசிலித் தீவுக்குள்ளும், வெனிசு, பிரான்சு நாடுகளுக்குள்ளும் வெள்ளம் புகுந்து பல உயிர்களைக் கொன்றது.



4. கழக நூல்கள்-II

முன் இதழில் கூறியபடி முதல் மூன்று தமிழ்க்கழகங்களிலும் இருந்த புலவர்கள் பாடியதாகக் குறிப்பிடப்படும் இலக்கியங்களே கழக இலக்கியங்கள் ஆகும்.

கழக இலக்கியங்களுள் தொல்காப்பியம் ஒன்றே இரண்டாம் கழகத்தைச் சேர்ந்த நூலாகும். தொல்காப்பியத்தைத் தவிர மிதியுள்ள நூல்களெல்லாம் தனித்தனிப் பாடல்களின் தொகுப்புகளே ஆகும்.

முன் இரண்டு கழகங்களும் அழிந்தபின் எஞ்சியிருந்த பாடல்களுடன் இப்பொழுதுள்ள மதுரைக்கு வந்த புலவர்கள் மூன்றும் கழகத்தை நிறுவி, அதிலிருந்து தமிழ் வளர்த்தனர். அவர்கள் அதுவரை இருந்த தமிழ்ப் பாடல்களையெல்லாம் ஒன்று திரட்டிப் பல தொகுப்புகளாகச் செய்து அவற்றை அழிந்துபோகாமல் காத்தனர்.

அவ்வாறு தொகுக்கப்பெற்ற தொகுப்புக்கள் மூன்றாகும். அவையே எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு என்பவையாகும்.

எட்டுத்தொகை என்னும் தொகுதியில் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு முதலிய தொகைநூல்கள் குறிக்கப்படுகின்றன. இந்நூல்கள் ஒவ்வொன்றும் புலவர்கள் பலர் சேர்ந்து பாடிய பாடல்களின் தொகுப்புக்களே ஆகும்.

பத்துப்பாட்டு என்னும் தொகுதியில் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநெல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்னும் பத்து நூல்கள் அடங்கும். இந்நூல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு புலவரால் பாடப்பெற்றது. ஒவ்வொரு நூலும் ஒவ்வொரு பாடலைக் கொண்டதாகும்.

பிழையில்லாமல் எழுதுங்கள் பேசுங்கள்

உண்மைப் பொருள் தெரியாமல் சொற்களை எப்படி எப்படித் தப்பும் தவறுமாகப் பேசியும் எழுதியும் வருகின்றோம் என்பதைப்பற்றி முன்பு சிறிது படித்தோம்; சில சொற்களையும் தெரிந்துகொண்டோம். இந்த இதழில் இன்னும் சில பிழையான சொற்களையும், அவற்றின் சரியான வடிவங்களையும் தெரிந்துகொள்வோம்.

பொதுவாக எல்லாரும் செலவு என்பதைச் சிலவு என்றே பிழையாக எழுதி வருகின்றனர். செல் என்னும் வினைச்சொல் அடியாகப் பிறந்த பெயர்ச்சொல்லே செலவு என்பதாகும். அதுவே சரியான வடிவம். சிலவு என்பதற்குப் பொருளே இல்லை.

அதேபோல் தொடக்கம் தொடங்கு என்பவற்றைத் துடக்கம் துடங்கு என்றோ, துவக்கம் துவங்கு என்றோ எழுதுகின்றனர். இவை பிழை.

(முன்பக்கத் தொடர்ச்சி)

பதினெண் கீழ்க்கணக்கு என்னும் தொகுதியில் திருக்குறள், நாலடியார், பழமொழி, நான்மணிக்கடிகை, திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஆசாரக் கோவை, ஏலாதி, இனைநாற்பது, இனியவை நாற்பது, முதுமொழிக் காஞ்சி, திணைமாலை நூற்றைம்பது, ஐந்திணை எழுபது. ஐந்திணை ஐம்பது, திணைமொழி ஐம்பது, கைந்நிலை, கார் நாற்பது, களவழி நாற்பது என்னும் பதினெட்டு நூல்கள் அடங்கும். இந்நூல்களும் தனித்தனிப் புலவர்களால் செய்யப்பட்டவையே ஆகும்.

மேலே குறிப்பிட்ட நூல்கள் அனைத்துமே கழக இலக்கியங்களாகும். ஒருவன் தமிழ்மொழியில் போதிய அறிவுபெற விரும்புவானாயின் தமிழறிவுச் செல்வங்களாகிய இந்நூல்கள் அனைத்தையும் ஒருவாறு கற்றுத்தேர்தல் நலம். அல்லாக்கால் அவனைத் தமிழறிவு பெற்றவன் என்று கூறமுடியாது.

இந்நூல்களில் பண்டைக்காலத் தமிழ்மக்களின் செப்பமும் பண்பாடும்நிறைந்த வாழ்க்கை முறைகளும், தமிழ் அரசர்களின் அறமுறைகளும், இயற்கை அழகும் நிரம்பிக்கிடக்கின்றன. அவை படிப்போரின் உள்ளத்தையும் அறிவையும் வளர்க்குந்திறத்தன.

இவைபற்றி இன்னும் விளக்கமான செய்திகளை இனிவரும் இதழ்களில் படிப்போம்.

தொடு என்னும் வினைச்சொல்லடியாகப் பிறந்த சொல்லே தொடக்கம். ஒரு வேலையைத் தொட்டவுடன் அவ்வேலை தொடங்கி விடுகின்றது.

அவ்வேலை தொடங்கிற்று.
இன்றே அதன் தொடக்கநாள்.
நான்தான் அதைத் தொடங்கினேன்.

என்று எழுதப்படுதலே சரியான வடிவம். இவையன்றி அவ்வேலை துவங்கிற்று; அல்லது துடங்கிற்று என்றெல்லாம் எழுதுவது பிழை.

இனி, தொடு என்பதற்கும் மூலப்பொருள் தரும் சொல் உண்டு. அதைப்பற்றியெல்லாம் பின்னால் தெரிந்துகொள்ளலாம்.

சிலர் சுடுநீர், அல்லது வெந்நீரை, சுடுதண்ணீர் என்றே சொல்லியும் எழுதியும் வருகின்றனர். இவர்கள் தண்ணீரைப் பச்சைத்தண்ணீர் என்றும் சொல்லுவார்கள். பச்சை என்பது காயாத என்ற பொருளைத் தருமானாலும் அது தேவையில்லை. தண் + நீர் என்றாலே குளிர்ச்சியான நீர் என்று தானே பொருள். எனவே சுடவைக்காத நீரைத் தண்ணீர் என்றும் சுடவைத்த நீரைச் சுடுநீர் அல்லது வெந்நீர் என்றுமே சொல்லுதல் வேண்டும்.

வெந்நீர் குளிர்ந்துபோயிருப்பின் ஆறியநீர் என்றே சொல்லுதல் வேண்டும்.

சிலர் அரிவாள்மணை என்பதை அருவாமனை என்றும், அருகாமனை என்றும் மிகவும் பிழையாகச் சொல்லுகின்றனர். அரிதல்– துண்டு துண்டாக நறுக்குதல். வாள் – கூரிய முனையுள்ள கத்தி. மணை – பலகை.

அரிகின்ற கூரிய முனையுள்ள வாள் வைத்த பலகை அல்லது இருப்புப்பலகை என்று பொருள்படும் அரிவாள்மணை என்பதே சரியான வடிவம்.

இதைத் தெரிந்து கொண்டபின் அருவாமனை என்று பிழையாக எழுதுவோமா?

எனவே சொற்களைப் பொருள் தெரிந்துகொண்டு எழுதுவதும் பேசுவதுமே சரியான வழியாகும். அப்படி இல்லாமல் இருந்தால் நாம் படித்தவர்கள், கற்றவர்கள் என்று கூறிக்கொள்வதில் என்ன பயன்?

முத்துமொழிகள்

- இளமைக் குற்றம் முதுமைப் பிணி.
- மரத்தின் வலிமை குருத்தில் தெரியும்.
- நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு.
- பகுத்தறியாமல் துணியாதே; படபடப்பாகச் செய்யாதே!
- பன்றி பலகுட்டி! அரிமா ஒருகுட்டி!
- முருங்கை பருத்தாலும் தூணாக உதவுமோ?
- ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு.
- கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுள் பிறந்த பதர் ஆகும்மே!
- அச்சம் உள் அடக்கி, அறிவு அகத்து இல்லாக்
கொச்சை மக்களைப் பெறுதலின் அக்குடி
எச்சம் அற்று ஏமாந்திருக்கை நன்றே!
- திறம்பேசிக் கலகமிட்டுத் திரிய வேண்டா!
- ஒழுக்கம் உயர்குலத்தின் நன்று.
- கல்வியின் ஊங்கில்லை சிற்றுயிர்க்கு உற்ற துணை.
- கற்றாரை நோக்கிக் கருத்தழிக; கற்றது எல்லாம்
எற்றே இவர்க்கு நாம் என்று.
- மெய்வருத்தம் பாரார்; பசிநோக்கார்; கண்துஞ்சார்;
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்; செவ்வி
அருமையும் பாரார்; அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண் ஆயினர்.

கதிரவன்

துரை-மாணிக்கம்

கதிரவனே! கதிரவனே!
கடலில் வந்த கதிரவனே!
உதிராத நெருப் பாகி
உடல் கொளுத்தும் கதிரவனே!

காலையிலே தோன்றுவ தேன்?
கருவானம் நீந்துவ தேன்?
மாலையிலே மறைகுவ தேன்?
மக்களினம் வாழ்வ தற்கோ?

காயாத ஈர மெல்லாம்
கை நீட்டித் துடைக்கின்றாய்!
ஓயாமல் ஒளி கொடுத்தே
உயிர் வாழச் செய்கின்றாய்!

கடல் நீரைக் காய்ச்சுகின்றாய்!
கருமுகிலை எழுப்பு கின்றாய்!
உடல்குளிர மழை பொழிந்தே
உயிர் வாழச் செய்கின்றாய்!

உலகில் உள்ள இருள் விரட்ட
ஓடோடி வருகின்றாய்!
பலவகை யாய் உதவுகின்றாய்!
பயன் கருதா துழைக்கின்றாய்!

எவ்வுயிர்க்கும் நல்லவனே!
இணையில்லா வல்லவனே!
இவ்வுலகம் தழைப்பதற்கே
ஈடில்லா துழைப்பவனே!

(இப்பாடல் முன்பே 'தென்மொழி' சிறுவர் பகுதியில் வெளியிடப் பெற்றது. தமிழ்ச்சிட்டுத் தம்பி தங்கைகளுக்காக மீண்டும் வெளியிடப் பெறுகின்றது.

சிட்டுக் குருவி

(பெருங்கடுங்கோ – தமிழ்க்குடில்)

சின்னக்குருவி சிட்டுக்குருவி
சிலுசிலுக்குது – அதோ
சிலுசிலுக்குது – அது
சின்னஞ்சிறிய மணிவிழியை உருட்டி ஆட்டுது – நல்ல
சீரகச்சம்பா வாய்திறந்து இசையைக் கூட்டுது.

அம்மா பறவை அருகில் வந்தே
இரை கொடுக்குது – அதோ
இரை கொடுக்குது – அந்தக்
கம்பங்கதிரைச் சுவைத்துக் கண்ணில் ஒளியை ஏற்றுது – தாயின்
கனிவைப் போற்றி நன்றி நன்றி என்று சாற்றுது.

பட்டுப் போன்ற உடலைத் தூக்கிப்
பந்தடிக்குது – புதரில்
பந்தடிக்குது – அது
பொட்டு விழியைச் சிமிட்டித் தலையை ஒடித்துப் பார்க்குது – நெஞ்சம்
பொங்கி எழுந்த குரலின் ஓசை மனதை ஈர்க்குது.

பெரியோர் கதை!

அறிவியல் அறிஞர் ஐன்சுடீன்

"வழுதி"

உலகத்தின் தலைசிறந்த அறிவியல் பேரறிஞர்களுள் ஒருவர் ஐன்சுடீன். நாம் வாழும் இந்த மண்ணுலகத்துக்கும், கோடிக்கணக்கான விண்மீன்கள் சுழன்றுகொண்டிருக்கும் எல்லையற்ற விரிந்த வானவெளிக்கும் உள்ள தொடர்பினைப்பற்றி அவருக்கு முன் இருந்த எந்த அறிவியலறிஞரும் கண்டுபிடித்திராத புதிய உண்மையினைக் கண்டு பிடித்துக் கூறியவர். அணுவை ஆராய்ந்ததில் முதல் இடம் பெற்றவர்.

செருமனிநாட்டில் 'உல்ம்' என்னும் சிற்றூரில் 1879-ஆம் ஆண்டு மார்ச்சுமாதம் 14 ஆம் நாள் பிறந்தார். அவர்களின் குடும்பம் வறுமை மிக்கதாயிருந்தது. ஐன்சுடீன் இளமையிலேயே கூரிய அறிவும் ஆராய்ச்சி வேட்கையும் உடையவராயிருந்தார். தொடக்கப் பள்ளியில் படிக்கையில், கணக்குப் பாடங்களில் மிகுந்த ஈடுபாடு காட்டி, மிக விரைவில் அவற்றைக் கற்றுக்கொண்டார். பின்பு உயர்நிலைப்பள்ளியில் சேர்ந்து படிக்கையில், இடையில் படிப்பை நிறுத்திவிட்டுத் தந்தையாருடன் இத்தாலிநாடு சென்றார். அங்கிருந்து சூரிச்சு நகரிலுள்ள பல்கலை நுணுக்கப் பள்ளிக்குச்சென்று கணக்கியல் விளங்கியல் ஆரர்ய்ச்சிப் பாடங்களை எடுத்துக்கொண்டார். அவற்றில் சிறப்பாகத் தேர்ந்தார். பெர்ன் நகரில் அறிவியல் ஆராய்ச்சிகளைப் பதிவுசெய்யும் வேலை கிடைத்தது.

மிலேவர் என்னும் செருமியநாட்டு நங்கையைத் திருமணம் செய்துகொண்டார். அவருக்கு ஒரு மகன் பிறந்தான். ஆல்பர்ட்டு என்று அவனுக்குப் பெயரிட்டார். ஐன்சுடீனின் ஆராய்ச்சித் திறமையால் சூரிச்சுப் பல்கலைக் கழகத்தில் வேலை கிடைத்தது. அறிவியல் கட்டுரைகள் பல எழுதினர். அவரின் திறமையை உலகம் உணர்ந்து பாராட்டியது. பின்பு பிரேக் நகரப் பல்கலைக் கழகத்தில் சிலகாலம் பணியாற்றி மீண்டும் சூரிச்சுக்கே சென்றார். அவரிடம் கற்பதென்றால் மாணவர்கட்கு மிகவும் விருப்பம். இதுவரை விளங்கியல் துறையில் விளங்காத பல உண்மைகளை விளக்கிப் புதிய கொள்கைகளை எடுத்துரைத்தார். **1911**-ஆம் ஆண்டில் உலக அறிவியல் அறிஞர்களின் பேரவை ஒன்றில் ஐன்சுடீன் தம் கொள்கைகளை அறிஞர்கட்கு விளக்கிக் காட்டினர். ஆயினும் அவர் எடுத்துரைத்த சார்புநிலைக்கொள்கை மிகவும் ஆழமும் நுணுக்கமும் உடையது. அதை மிக நன்றாகப் புரிந்துகொண்டவர்கள் உலகம் முழுவதிலும் எடுத்துக்கொண்டாலும் பத்துப் பெயர்கட்குமேல் இருக்கமாட்டார்!

1914-இல் முதல் உலகப்போர் ஏற்பட்டது. ஐன்சுடீன் அருள் உள்ளமும் விரிந்த நோக்கமும் கொண்டவர். போரை வெறுத்தார். போரை வெறுக்கும் அமைதி இயக்கம் ஒன்றில் பங்குகொண்டு பணியாற்றினர். அணு என்னும் சிறு துகளை அறிவியல் துணைகொண்டு பிளந்தால் எவ்வளவு வலிவான பேராற்றல் வெடித்துக் கிளம்புகிறது என்பதையும் அதை மக்கள் நன்மைக்காக எவ்வளவு நன்றாகப் பயன் படுத்தலாம் என்பதையும் கண்டறிந்து கூறினர்.

1922–ஆம் ஆண்டில் உலகப் பேரறிஞர்கட்குக் கிடைக்கும் நோபேல் பரிசு ஐன்சுடீனுக்குக் கிடைத்தது. செருமனியிலிருந்த அவர் போர்வெறி பிடித்த இட்லரின் கை ஓங்கியபொழுது அவனின் தவறான கொள்கையையும் நாட்டின் பிழையான போக்கையும் வெறுத்துத் தாய் நாட்டைத் துறந்து வெளியேறினர். அமெரிக்கா அவரை வரவேற்றது. அமெரிக்காவில் தங்கிப் பல பயனுள்ள ஆராய்ச்சிகளை நடத்தினர்.

ஐன்ஸ்டீன் பகட்டான வாழ்க்கையை விரும்பாதவர். அனைவருடனும் இனிமையாகப் பழகுபவர். உண்மையினின்று வழுவாதவர். நடிப்பு நாகரிகத்தை வெறுப்பவர். குழந்தைகளிடத்தில் மிகுந்த ஈடுபாடுகொண்டவர். தாமே குழந்தை உள்ளம்கொண்டவர்! குழந்தைகள் கிடைத்துவிட்டால் ஆராய்ச்சியை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு அவர்களோடு தாமும் குழந்தைபோல் விளையாடுவாராம்!

எழுபத்தாறுவது அகவை முடிந்த சிலநாட்களில் ஐன்ஸ்டீன் திடுமெனக் குருதிநாளம் வெடித்து இறந்தார். அந்நாள் 1955-ஆம் ஆண்டு ஏப்ரல் 18. அவர் மறையினும் அவர் புகழ் மறையவில்லை.

அவரின் உயர்ந்த வாழ்க்கை உங்கட்கு வழிகாட்டியாக அமையுமா? ○

படம் பார்க்கும் நேரம்!

திரைப்படக் கொட்டகையில் காட்டப்படும் திரைப்படத்தை இடைவேளையில்லாமல் காட்டினால் சரியாக 2 மணி 30 நிமையங்கள் ஆகின்றன என்று வைத்துக்கொள்வோம். படம் திரையில் 2 மணி 30 நிமையங்கள் தொடர்ந்து காட்டப்பெற்றாலும் நாம் படம் பார்க்கும் நேரம் மட்டும் சரியாக 2 மணி 15 நிமையங்களே! எப்படித் தெரியுமா?

படச்சுருளில் ஒரு படத்திற்கும் இன்னொரு படத்திற்கும் இடைவெளி இருப்பது நமக்குத் தெரியும். இவ்விடைவெளிகளும் நாம் படம் பார்க்கையில் திரையில் விழுந்து விழுந்தே மறைகின்றன. ஆனால் ஒவ்வொரு இடைவெளியும் திரையில் விழுந்து மறைய ஒரு நொடியில் பத்தில் ஒருபங்கு நேரமாகின்றது. இச்சிறிய அளவு நேரத்தை நம் கண்கள் பார்த்து நினைவு வைத்துக் கொள்வதற்குள் அடுத்து அடுத்து உள்ள படங்கள் தொடர்ந்து திரையில் விழுந்து கொண்டே இருக்கின்றன என்றாலும் நாம் பார்க்கின்ற நேரத்தில் 10-இல் ஒருபங்கு நேரத்தில் நாம் இவ்விடைவெளிகளைத் தான் திரையில் பார்க்கின்றோம். இக்கணக்குப்படி பார்த்தால் 2½ மணி நேரத்தில் 15 நிமையங்கள் நாம் படத்தைப் பார்ப்பதில்லை. எனவே படம் பார்த்த நேரம் இரண்டேகால் மணியே! புரிகின்றதா?

சி. தட்சிணாமூர்த்தி, திருவண்ணாமலை.

மொழியின் கதை

உலகில் ஏறத்தாழ 900 மொழிகள் உள்ளன. அவற்றில் இலக்கண இலக்கியங்களுடன் வழங்கும் மொழிகள் மிகச் சிலவே. அறிஞர் 'ஆரியம், துரானியம், சேமியம்' என்று மொழிகளை மூன்று குடும்பமாகப் பிரித்திருக்கின்றனர்.

கிரீக்கு, இலத்தீன். இத்தாலியம், பிரெஞ்சு, செர்மன். ஆங்கிலம். உருசியம் முதலிய ஐரோப்பிய மொழிகளும், பார்சி, சமற்கிருதம், இந்தி, வங்கம், மராத்தி, குசராத்தி முதலிய ஆசிய இந்திய மொழிகளும் ஆரியக் குடும்பத்தைச் சேர்ந்தவை.

அரபி, யூதம், சீரியம், எதியோப்பியம், கார்த்தசீனம், ஆகியவை சேமியக் குடும்பத்தன.

சீனம், சப்பானியம், மலாய், பர்மியம். திரவிடம் ஆகியவை துரானியக் குடும்பத்தைச் சேர்ந்தவை.

திரவிடம் அவற்றுள் சிறந்தது. திரவிடத்தில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துருவம், குடகு முதலிய பண்பட்ட மொழிகள் தோன்றின. துதம், கோதம், கோண்டு, கூ, இராசமகால், பிராகூயி ஆகிய பண்படாத மொழிகள் காடு, மலை வாசிகளிடம் வழங்கும் திராவிட மொழியாகும்.

எல்லா மொழிகளையும் வடிக்கட்டிப் பார்த்தால் இன்று பழம் பெருமையுடனும், புதிய உறுதியுடனும் விளங்கும் மொழிகள், தமிழ், வங்கம், ஆங்கிலம், பிரெஞ்சு, செர்மன், உருசியம், இத்தாலியம், இசுபானியம், பார்சி,சீனம், சப்பானியம் ஆகியவையே!

(அனுப்பியவர் : பாபநாசம் "சூரியராசா")
நூல் : இனிய தமிழ் இலக்கணம்.

அறிவிப்பு !

கடந்த இரு கிழமைகளுக்குமேல் தொடர்ந்து பெருமழை பெய்தமையாலும், பெண்ணையாற்று வெள்ளம் பெருகி நமது அச்சக, அலுவலகங்களில் வேலைசெய்ய இயலாமல் இடர்ப்பாடாய் இருந்தமையாலும் நமது இதழ் வேலைகள் தடைப்பட்டு விட்டன. ஆதலின் இம்மாதத் தென்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ்கள் குறித்த காலத்தில் வராது போக நேர்ந்து விட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

—அமைச்சர்.

தெரிந்து கொள்ளுங்கள்

O அரளி இலைகளை வெந்நீரில் போட்டுக் கொதிக்கவைத்து, கை பொறுக்கும் சூட்டில் அந்நீரால் வீக்கங்களைக் கழுவினால் வீக்கம் குறையும். அரளிப் பூக்களைத் தலையில் வைத்துக்கொண்டால் மண்டை அரிப்பு நீங்கும். தலைமயிர் உறுதியாக இருக்கும். தலையில் பேன் உண்டாகாது.

O வீட்டிற்கு வண்ணங்கள் பூசுவதைவிடச் சுண்ணாம்பு அடிப்பதே சிறந்தது. ஏனெனில் நாம் வெளிவிடும் நச்சுக்காற்றாகிய கரி வளியை உறிஞ்சிக் காற்று வெளியைத் தூய்மைப்படுத்தும் ஆற்றல் சுண்ணாம்புக்கு உண்டு.

O நம்முடைய உடலில் எத்தனை அணுக்கள் இருக்கின்றன தெரியுமா? 1 க்குப் பின்னால் 28 சுன்னங்களைப் போட்டால் எத்தனையோ அத்தனை அணுக்கள்.

O அண்டாரசு என்ற விண்மீன் கதிரவனைப்போல 450 மடங்கு பெரியது.; 14000 மடங்கு ஒளியுடையது.

O கதிரவன் ஒளி மிகுந்த ஆற்றல் வாய்ந்தது ஒரு சதுர அடியில் விழும் அவ்வொளி, 100 கல்லெடை (டன்) கனமுள்ள ஒரு பொருளை ஒரு கல் (மைல்) உயரத்திற்குத் தூக்கி எறியும் ஆற்றல் வாய்ந்தது.

O கடல் அலைகள் ஏறத்தாழ ஒரு மணிக்கு 15 கற்கள் பயணம் செய்கின்றன.

O முழுநிலவுக் காலத்தில் கடலின் அலைகள் ஏறத்தாழ 50 அடிகள் வரை உயரும்.

O உலகில் உள்ள எல்லா ஆறுகளும் ஒவ்வோர் ஆண்டும் 6500 கனக்கற்கள் நீரைக் கடலில் கொண்டுபோய்ச் சேர்க்கின்றன. (ஒரு கனக்கல்நீர் என்பது ஒரு கல் (மைல்) நீளம், ஒரு கல் அகலம், ஒரு கல் உயரம் உள்ள இடத்தில் கொள்ளும் நீராகும்.)



புதிர்....?

சென்றமாதம் வெளிவந்த புதிர் 1-இன் விடை :

14 முயல்கள்; 21 புறாக்கள்.

புதிர் 2-இன் விடை ; 81 மாலைகள்.

இம்மாதப் புதிர்களையும் இரண்டு தம்பிகள் எழுதியுள்ளனர்.

புதிர் : 1.

ஒரு நொறுவைக்கடையில் பலவகையான நொறுவைகள் விற்கப்பட்டன. அவற்றுள் வட்டமானவையும் சதுரமானவையும் இருந்தன. சதுரமானவற்றின் விலை வட்டமானவற்றின் விலையைப்போல் $1\frac{1}{2}$ மடங்கு. ஒருவன் 70 காசுகள் கொடுத்து இரண்டுவகை நொறுவைகளையும் வாங்கினான், இரண்டின் எண்ணிக்கைகளும் சமமாக இருந்தன. ஒவ்வொன்றிலும் அவன் வாங்கிய நொறுவைகள் எத்தனை? அவற்றின் விலை என்ன ?

இப்புதிரைப் போட்டிருக்கும் தம்பி : க. தெய்வசிகாமணி,
கல்மண்டபம், விழுப்புரம் வட்டம்.

புதிர் : 2.

ஓர் ஊரில் மூன்று குளங்கள் இருந்தன. இக்குளங்களை முத்து என்பவன் நாள்தோறும் போய்ப் பார்ப்பது வழக்கம். ஒருநாள் அவன் குளத்திற்குப் போகும்பொழுது சில பூக்களை எடுத்துச்சென்று முதல் குளத்தில் போட்டான். உடனே அவன் போட்ட பூக்கள் இரண்டு மடங்காக மாறிவிட்டன. அவன் அவற்றை எடுத்து 8 பூக்களைமட்டும் அக்குளத்திலேயே போட்டுவிட்டான். மீதி உள்ள பூக்களைக் கொண்டு போய் இரண்டாவது குளத்தில் போட்டான். அவையும் இரண்டு மடங்காகப் பெருகிவிட்டன. முத்து அவற்றையும் எடுத்து, 8 பூக்களை மட்டும் அக்குளத்திலேயே போட்டுவிட்டு, மீதியுள்ள பூக்களை எடுத்துக் கொண்டுபோய் மூன்றாவது குளத்தில் போட்டான். அப்பூக்களும் முன்போலவே இரண்டு மடங்காகிவிட்டன. முத்து அவற்றை எடுத்து எண்ணிப்பார்த்தான். சரியாக 8 பூக்கள் இருந்தன. எனவே அவை முழுவதையும் அக்குளத்திலேயே போட்டுவிட்டு வீட்டிற்கு வெறுங் கையனாகப் போனான். முத்து வீட்டிலிருந்து எடுத்துச்சென்ற பூக்கள் எத்தனை ?

இப்புதிரைப் போட்டிருக்கும் தம்பி : எம். ஆர். செகதீசன்.
முஞ்சூர்பட்டு, வேலூர் வட்டம்

இவ்விரண்டு புதிர்களின் விடைகளையும் அடுத்தஇதழில் பாருங்கள்.

(இப்பகுதியில் வரும் மாணவர்தம் விருப்பங்களை ஆசிரியர்களும் எழுத்தாளர்களும் நிறைவு செய்வார்களாக.)

O தூய தமிழில் எழுதும் பழக்கம் மாணவர்களிடையே பெருகும் வகையில் மாணவர்களுக்காகக் கட்டுரை, பாட்டுப் போட்டிகள் ஏற்படுத்துங்கள். இதழ்தோறும் ஒரு சிறு கதையாவது (குறைந்தது மூன்று பக்க அளவில்) வெளிவரவேண்டுமென்று விரும்புகின்றோம். உலகம் போற்றும் அறிஞர்களின் வாழ்வில் நடந்த, மாணவர்கள் அறியவேண்டிய நிகழ்ச்சிகளை வெளியிடுங்கள்.

சோம. தேவராசன், அறி; இளை. குறிஞ்சிப்பாடி.

O இன்று நாங்கள் சிறு குழந்தைகள். ஆனால் நாங்களே இந்நாட்டின் பொறுப்பை ஏற்கும் பெரியவர்கள். பல இடங்களிலும் தனித்தனியாகக் காணப்படும் சிற்சில ஒளிக்கற்களுக்கு முதலில் ஒளி இருப்பதில்லை; அழகும் இருப்பதில்லை! அவற்றில் ஒளியையும் அழகையும் காணவேண்டுமானால், அவற்றைப் பட்டைதீட்டி ஒரு மாலையாக அமைத்தல்வேண்டும். இவ்வாறு ஒளி மணிகளாகச் சிதறிக்கிடக்கும் எங்களை நல்லமுறையில் எதிர்கால இயைபுகளுக்கும் ஏற்ற தோற்றங்களுக்கும் தகுந்தாற்போல் ஆளாக்குவது குடும்பமும் நல்ல அரசுமே ஆகும். குடும்பம் எங்களை எந்த வகையில் உருவாக்குகின்றதோ அவ்வாறே நாங்கள் உருவாகின்றோம். ஆகையால் எங்களை உரியவகையில் ஆளாக்குவது குடும்பத்தாரின் கடமை. அடுத்தபடி எங்களின் அறிவுக்கு ஊக்கம் கொடுத்தும் மனக்கருத்துகளுக்கு ஆக்கம் கொடுத்தும், எங்கள் வாழ்க்கையை நல்லமுறையில் அமைத்துக் கொண்டு நல்வாழ்வு வாழ்வதற்கு அரசும் ஏற்ற திட்டங்களைப் போட்டும் எங்களைப்போன்ற நாட்டின் இளைஞர்களை வளரவைக்க வேண்டுமென்பதே எங்கள் விருப்பம்.

சா. கண்ணன் (ஊர்ப்பெயரில்லை.)

மாணவர்க்கான மணி மொழிகள்

தமிழ்ச்சிட்டுகளே,

- O உங்கள் ஒவ்வொருவரிடத்தும் ஒவ்வொரு திறமையோ ஆற்றலோ மறைந்து கிடக்கின்றது. அதனை மலரச்செய்வதே வாழ்க்கை என அறிந்து கொள்ளுங்கள்.
- O ஒழுக்கம் உயிரினும் மேலானது. ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் தவருமல் கடைப்பிடியுங்கள்.
- O நூல் நிலையங்கட்குச் சென்று சிறந்த அறிவு நூல்களையும் நல்ல செய்தித்தாள்களையும் படிப்பதை வழக்கமாகக் கொள்ளுங்கள்.
- O பெரியோர்களின் வாழ்க்கைக் கதைகளைப் படித்து அவர்களைப் போல் நீங்களும் சிறந்தவர்களாக முயற்சி செய்யுங்கள்.
- O நல்லுணர்வையும் பண்பாட்டையும் கெடுக்கக்கூடிய திரைப் படங்களில் வீணுக மயங்கி உங்களையே கெடுத்துக் கொள்ளாதீர்கள்.
- O எல்லா உயிர்களிடத்தும் அன்பாயிருங்கள். உங்கள் மகிழ்ச்சிக்காக அவற்றுக்கு ஊறு விளைவிக்காதீர்கள்.
- O பிறருக்கு உங்களால் இயன்ற அளவு நன்மை செய்தல் வேண்டும் என்பதைக் கட்டாயமாகக் கொள்ளுங்கள்.
- O உங்கள் பெற்றோரிடத்தும் பெரியோரிடத்தும் பணிவுடனும் இன்சொல்லுடனும் நடந்து கொள்ளுங்கள்.
- O சோலைகளிலும் காடுகளிலும் திரிந்து இயற்கை அழகைச் சுவைப்பதிலும், இயற்கைப் பொருள்களோடு உறவாடுவதிலும் இன்பம் காணுங்கள்.
- O இறுதியாக, உங்கள் தாய் மொழியாகிய தமிழும், தாயகமாகிய தமிழகமும் இருவிழிகள் எனக்கொண்டு அவற்றுக்கு இயன்ற அளவு பணிபுரியுங்கள்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.